IN THE COURT OF THE SUBORDINATE JUDGE OF ATTUR

DEPOSITION OF WITNESS

P.W.1

O.S No. 48/2016

Name : **வெங்கடாசலம்**
Father's Name :
Village :
Taluk :
Caste :
Calling :
Religion :
Age :

Solemnly affirmed in accordance with provisions Act of 1873 of the day of 01.04.2026.

வா.சா.1 முதல் விசாரணை:-

எனது முதல் விசாரணையை எழுத்து வடிவ பிரமாண சாட்சியாக தாக்கல் செய்கிறேன். அதில் கண்டுள்ள வாசகங்கள் என்னால் சொல்லப்பட்டுள்ளது தான். அதில் உள்ள சங்கதிகள் எல்லாம் படித்துப்பார்த்து கையெழுத்து செய்தேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். நான் இவ்வழக்கின் வாதி. 25.06.2010 தேதிய வெங்கடாசலம் என்பவர் லட்சுமிக்கு எழுதி கொடுத்த தான செட்டில்மெண்ட் பத்திரம் இணையவெளி நகல் வா.சா.ஆ.1. 20.05.2013 தேதிய 1ம் பிரதிவாதி பொது அதிகாரம பெற்ற முகவர் என்ற அடிப்படையில் 2ம் பிரதிவாதி மணிமேகலை பெயருக்கு எழுதி கொடுத்துள்ள கிரய பத்திரம் ஆவண எண்.2741/2013 சார்பதிவாளர் அலுவலகம், ஆத்தூர் இணையவெளி நகல் வா.சா.ஆ.2. 10.01.2014 தேதிய மணிமேகலை என்பவர் ரங்கநாயகி என்பவருக்கு எழுதி கொடுத்த விற்பனை பத்திரம் ஆவண எண்.137/2014 சார்பதிவாளர் அலுவலகம், ஆத்தூர் இணையவெளி நகல் வா.சா.ஆ.3. சார்பு நீதிமன்றம், ஆத்தூரில் தாக்கல் செய்யப்பட்ட அ.வ.எண்.281/2015-ன் வழக்குரை சார்வு நகல் வா.சா.ஆ.4.

03.05.2018 தேதிய 3ம் பிரதிவாதி 4ம் பிரதிவாதி கனிமொழிக்கு எழுதிக்கொடுத்துள்ள தான செட்டில்மெண்ட் பத்திரம் இணையவெளி நகல் வா.சா.ஆ.5. 05.05.2021 தேதிய பட்டா எண்.533 இணையவெளி நகல் வா.சா.ஆ.6. 05.05.2021 தேதிய பட்டா எண்.1128 இணையவெளி நகல் வா.சா.ஆ.7. 25.07.2022 தேதிய ந.க.எண்.121/இ 3/2022ல் District Registrar, Salem East அவர்களால் பிறப்பிக்கப்பட்ட உத்தரவு சார்வு நகல் வா.சா.ஆ.8. ஆக குறியீடு செய்யப்படுகின்றன. தாவாப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன். வழக்கறிஞர் வேண்டுகோளின் பெயரில் குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.

" என்னால்/ என் முன்பாக மேற்படி சாட்சியம் பதியப்பட்டு, சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/ படித்து காண்பிக்கப்பட்டு, அது சரி என அவரால் ஒப்புக் கொள்ளப்பட்டது."

GANESAN S

Digitally signed by GANESAN S
Date: 2026.04.01 17:50:31 +0530

Subordinate Judge, Attur.